# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8040834

1. District : மாவட்டம் திருநெல்வேலி | PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year: ஆண்டு 2023 | FIR No: மு.த.அ. எண் 04/2023 | Date: நாள் 16.03.2023

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 — Sections பிரிவுகள்: 7(a) r/w
(ii) Act சட்டம்: Cr.PC — Sections பிரிவுகள்: 102 Cr.PC
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 15.03.2023 — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 10.00 hrs to — Time to : நேரம் வரை 18.10 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.03.2023 — Time : நேரம் 10.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Joint-II Sub Registrar office, Tirunelveli, 5 Km North West.
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.நல்லையா — (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் திரு.கருப்பன்னன்
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 11.04.1972 — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் தனி வட்டாட்சியர், (நில எடுப்பு) — (g) Address : முகவரி நதி நீர் இணைப்பு திட்டம், அலகு III, பாளையங்கோட்டை திருநெல்வேலி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) திரு.M.முத்து முருகன், திருநெல்வேலி II நிர் இணை சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், திருநெல்வேலி. 2) திரு.C.விஜய ராமச்சந்திரன், அலுவலக உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், திருநெல்வேலி 3) திரு.R.மணிகண்டன், Data Entry Operator, சார் பதிவாளர் அலுவலகம், திருநெல்வேலி தனி நபர்கள் 4) திரு.R.ஏக்நாத், த/பெ.ராஜேந்திரன், வீரவநல்லூர். 5) திரு.S.ஜயப்பன், த/பெ.சங்கரமூர்த்தி, கோடீஸ்வரன் நகர், திருநெல்வேலி 6) திருமதி.V.இசக்கியம்மாள், க/பெ.வெங்கடாச்சலம், வ.உ.சி நகர், சுத்தமல்லி 7) திருமதி.N.ஜெயா, க/பெ.சண்முகம், கோமதி நகர் மேற்கு, சுத்தமல்லி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 16.03.2023ம் தேதி சுமார் 10.30 மணிக்கு கூடுதல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி E.மெக்லரின் எஸ்கால் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும் போது திருநெல்வேலி மாவட்டம். அலகு-III, பாளையங்கோட்டை, நதிநீர் இணைப்பு திட்டம், தனிவட்டாட்சியர் (நில எடுப்பு), திரு.க.நல்லையா அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 15.03.2023-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புனர், க.நல்லையா, தனிவட்டாட்சியர் (நில எடுப்பு), நதிநீர் இணைப்பு திட்டம், அலகு-III, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம். பெறுனர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. அய்யா, பொருள்: திருநெல்வேலி, II நிர் இணை சார் பதிவாளர் அலுவலகத்தை திடீர் சோதனை செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது தொடர்பாக. திருநெல்வேலி, II நிர் இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள், ஆவணங்கள் பதிவு செய்வதற்கு பணம் வசூல் செய்வதாக 15.03.2023-ம் தேதி கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

16/3/23 16/3/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /.
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 16.3.23 12.00 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் E.MCCLARINE ESKH...
Rank: நிலை ADSP No. எண் V&AC Tirunelveli.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால் அவர்களுடன் இணைந்து திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.D.ராபின் ஞானசிங் மற்றும் போலீசார் உதவியுடன் மேற்படி திருநெல்வேலி, II நிர் இணை சார் பதிவாளர் அலுவலகத்தில் மாலை 18.10 மணி முதல் 23.00 மணி வரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் இருந்த அலுவலக உதவியாளர் திரு.C.விஜயராமசந்திரன் என்பவரிடமிருந்து ரூ.29,400/-ம், Data Entry Operator திரு.R.மணிகண்டன் என்பவரிடமிருந்து ரூ.100/-ம், தனிநபர்களான திரு.R.ஏக்நாத் என்பவரிடமிருந்து ரூ.1,210/-ம், திரு.S.ஐயப்பன் என்பவரிடமிருந்து ரூ.9,800/-ம், திருமதி.V.இசக்கியம்மாள் என்பவரிடமிருந்து ரூ.4,800/-ம், மற்றும் திருமதி.N.ஜெயா என்பவரிடமிருந்து ரூ.12,250/-ம், மேற்படி அலுவலகத்தில் Store Room-ல் உள்ள ஸ்டீல் பீரோவில் இருந்து ரூ.1,000/-ம், Store Room-ல் இருந்த C.D Box-ல் இருந்து ரூ.2,900/-ம் ஆக மொத்தம் பணமாக ரூ.61,460/- கைபற்றப்பட்டது. மேற்படி பணத்திற்கு மேற்படியார்கள் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணமாகவும் இருக்கலாம் அல்லது கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைபற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை நடவடிக்கை நேற்று (15.03.2023) மாலை 18.10 மணிக்கு ஆரம்பித்து இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் இருந்த திருநெல்வேலி, II நிர் இணை சார் பதிவாளர் திரு.M.முத்து முருகன், அலுவலக உதவியாளர் திரு.C.விஜயராமசந்திரன், Data Entry Operator திரு.சு.மணிகண்டன், தனிநபர்களான திரு.R.ஏக்நாத், திரு.S.ஐயப்பன், திருமதி.V.இசக்கியம்மாள் மற்றும் திருமதி.N.ஜெயா ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகாருடன் செயல்முறை நடவடிக்கையை இணைத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன் (ஒம்.க.நல்லையா, 16.03.2023). 15.03.2023-ம் தேதி திருநெல்வேலி தாலுகா அலுவலகத்தின் மேல்புறம் அமைந்துள்ள திருநெல்வேலி II நிர் இணை சார்பதிவக அலுவலகத்தை திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, அலகு-III, நதிநீர் இணைப்பு திட்டம், தனிவட்டாட்சியர் (நில எடுப்பு) திரு.க.நல்லையா அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை :1) திரு.க.நல்லையா, தனிவட்டாட்சியர் (நில எடுப்பு), நதிநீர் இணைப்பு திட்டம், அலகு-III, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம். 2) திரு.E.மெக்லரின் எஸ்கால், கூடுதல் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. 3) திரு.D.ராபின் ஞானசிங், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. இன்று 15.03.2023-ம் தேதி திருநெல்வேலி, II நிர் இணை சார் பதிவாளர் அலுவலக ஊழியர்கள் ஆவணங்கள் பதிவு செய்வதற்கு பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி திருநெல்வேலி மாவட்டம்,

பாளையங்கோட்டை, அலகு-III, நதிநீர் இணைப்பு திட்டம், தனிவட்டாட்சியர் (நில எடுப்பு) திரு.க.நல்லையா அவர்கள் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால், காவல் ஆய்வாளர் திரு.D.ராபின் ஞானசிங் மற்றும் காவலர்கள் சகிதம் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மாலை சுமார் 17.00 மணியளவில் காவல் வாகனம் TN 21 G 0489-ல் புறப்பட்டு வண்ணாரப்பேட்டை, ஸ்ரீபுரம் வழியாக வந்து சுமார் 18.10 மணிக்கு S.N.ஹைரோடு தென்புறம் உள்ள திருநெல்வேலி தாலுகா அலுவலகத்திற்கு வரும் வழியாக உள்ளே வந்து மேற்படி அலுவலகத்தின் மேற்புறம் மேற்கு பார்த்து அமைந்துள்ள திருநெல்வேலி, II நிர் இணை சார்பதிவாளர் அலுவலகத்தின் மெயின் கேட் வழியாக உள்ளே வந்ததும், வராண்டாவில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.R.ஏக்நாத், த/பெ.ராஜேந்திரன், வீரவநல்லூர் என்பவரை விசாரணை செய்ய அவர் பத்திர எழுத்தர் திரு.P.ரவி என்பவரிடம் உதவியாளராக பணிபுரிந்து வருவதாக கூறினார். அவரை சோதனை செய்ய அவரது பேண்டின் பின்புற பாக்கெட்டில் இருந்து ரூ.1,210/- (100x12=1,200, 10x1=10)-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து திரு.R.ஏக்நாத்திடம் கேட்டபோது சரியான முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.1,210/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அதே வராண்டாவில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.S.ஐயப்பன், த/பெ.சங்கரமூர்த்தி, கோடீஸ்வரன் நகர், திருநெல்வேலி டவுண் என்பவரை விசாரணை செய்ய அவர் பத்திர எழுத்தராக பணிபுரிந்து வருவதாக கூறினார். அவரை சோதனை செய்ய அவரது சட்டையின் முன்பக்க பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.9,800/- (500x18=9,000, 200x2=400, 100x4=400)-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து திரு.S.ஐயப்பனிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.9,800/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அதே வராண்டாவில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.V.இசக்கியம்மாள், க/பெ.வெங்கடாசலம், வ.உ.சி. நகர், சுத்தமல்லி என்பவரை விசாரணை செய்ய அவர் மேற்படி பத்திர எழுத்தர் திரு.S.ஐயப்பன் என்பவருக்கு உதவியாக இருந்து வருவதாக கூறினார். அவரை சோதனை செய்ய அவரது பர்சில் வைத்திருந்த ரூ.4,800/- (500x9=4,500, 200x1=200, 100x1=100)-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து திருமதி.V.இசக்கியம்மாளிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.4,800/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அதே வராண்டாவில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.N.ஜெயா, க/பெ.சண்முகம், கோமதி நகர் மேற்கு, சுத்தமல்லி என்பவரை விசாரணை செய்ய அவர் பத்திர எழுத்தராக பணிபுரிந்து வருவதாக கூறினார். அவரை சோதனை செய்ய அவரது கைப்பையில் வைத்திருந்த

ரூ.12,250/- (500x24=12,000, 100x2=200, 50x1=50)-ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து திருமதி.N.ஜெயாவிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.12,250/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரை விசாரிக்க அவர் பொட்டலை சேர்ந்த திரு.பாப்பு என்பவர் சார் பதிவாளர் திரு.M.முத்து முருகன் என்பவருக்கு கொடுப்பதற்காக தன்னிடம் கொடுத்திருந்த ரூ.18,400/- பணத்தை மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலக உதவியாளர் திரு.C.விஜய ராமசந்திரன் என்பவரிடம் கொடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படி வராண்டாவில் இருந்து வடக்கு பார்த்து உள்ள வாசல் வழியாக உள்ளே நுழைந்ததும் ஹாலில் வடக்கு பக்கம் மேற்கு பார்த்து அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட கேமரா இயக்குபவர் திரு.S.சூர்யா என்பவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது பேண்டு பாக்கெட்டில் மணிபர்சில் வைத்திருந்த ரூ.1,500/- எடுத்து ஆஜர் செய்தார். அது தனது சொந்தப்பணம் என்று கூறினார். இது தொடர்பாக தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் சரிபார்த்து மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி வராண்டாவில் இருந்து வடக்கு பார்த்து உள்ள வாசல் வழியாக உள்ளே நுழைந்ததும் ஹாலில் சார் பதிவாளரின் இருக்கைக்கு முன்பாக மேற்கு பார்த்து அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட அலுவலக உதவியாளர் திரு.C.விஜயராமசந்திரன் என்பவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது மணிபர்சில் இருந்த ரூ.2,550/-ஐ எடுத்து ஆஜர் செய்து தனது சொந்த பணம் என்று கூறினார். அது தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் சரிபார்த்த போது அதில் ரூ.3,150/- என்று பதிவு காணப்பட்டது. மீதி பணம் ரூ.600/-ஐ செலவு செய்துவிட்டதாக தெரிவித்தார். எனவே மணிபர்சில் இருந்த ரூ.2,550/- பணம் மட்டும் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது மணிபர்சில் அவரது பெயரில் இருந்த IndusInd Bank, Legend VISA ATM கார்டு எண் 4147 5240 8649 4353, IOB வங்கி PLATINUM ATM கார்டு எண் 6522 0915 0085 2657, HDFC வங்கி PLATINUM VISA ATM கார்டு எண் 4160 2115 1387 5691, ICICI வங்கி VISA ATM கார்டு எண் 4838 3461 3502 9988, ICICI வங்கி Make my trip VISA ATM கார்டு எண் 4073 5202 0862 7001 ஆகியவைகள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரை சோதனை செய்ய அவரது பேண்டின் இடது பக்க பாக்கெட்டில் இருந்து ரூ.11,000/- (2000X5=10,000, 500X2=1,000) காணப்பட்டது. மேலும் அவரது இருக்கையை சோதனை செய்ய அவரது காலுக்கு கீழே கத்தையாக கிடந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.18,400/- (500X36=18,,000, 200X2=400) இருந்தது. மேற்படி மிகுதியாக இருந்த பணம் குறித்து அவர் தகுந்த முகாந்திரம் எதுவும் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.11,000/- மற்றும் ரூ.18,400/- ஆக மொத்தம் ரூ.29,400/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அலுவலக உதவியாளர் திரு.C.விஜயராமசந்திரன் இருக்கைக்கு தென்புறத்தில் வடக்கு பார்த்து அமர்ந்திருந்த பெயர் கேட்டு தெரிந்து

கொண்ட இணை சார் பதிவாளர் எண் II திரு.M.முத்து முருகன் என்பவரை சோதனை செய்தபோது அவரது பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூ.710/- எடுத்து ஆஜர் செய்து தனது சொந்தப்பணம் என்றார். அது தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் சரிபார்த்து, மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. ஹாலின் மேற்கு பக்கத்தில் உள்ள கணினி அறையில் தெற்கு பக்கத்தில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட உதவியாளர் திருமதி.K.நந்திதா என்பவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது கைப்பையில் இருந்த ரூ.2,190/- எடுத்து ஆஜர் செய்தார். அது தனது சொந்தப்பணம் என்று கூறினார். இது தொடர்பாக தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் சரிபார்த்து மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி கணினி அறையில் வடக்கு பக்கத்தில் கிழக்கு பார்த்து அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட Data Entry Operator திரு.R.மணிகண்டன் என்பவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது சட்டை பையில் இருந்த ரூ.350/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது தனது சொந்தப்பணம் என்று கூறினார். இது தொடர்பாக தனிநபர் கையிருப்பு பதிவேட்டில் பார்க்க அதில் ரூ.250/- என்று மட்டும் குறிப்பிட்டிருந்ததன் பேரில் மேற்படி பணத்தில் ரூ.250/- மட்டும் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மீதமாக இருந்த பணம் ரூ.100/- (100X1=100) மட்டும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி ஹாலின் கிழக்கு பக்க வாசல் வழியாக வந்து அங்குள்ள Store Room-ல் தெற்கு பக்கம் இருந்த ஸ்டீல் பீரோவை சோதனை செய்ய அதில் ரூ.2,500/- தனியாகவும், ரூ.1,000/- (100x10=1000) தனியாகவும் இருந்தது. மேற்படி பணம் குறித்து சார் பதிவாளரிடம் விசாரணை செய்ய ரூ.2,500/- கொடி நாளுக்காக ரசீது எண்.2963301 முதல் 2963325 வரை வசூல் செய்த தொகை என்று கூறினார். ரூ.1,000/- குறித்து தனக்கு தெரியாது என்று கூறினார். எனவே படை வீரர் கொடிநாள் ரசீது புத்தகம் 2022 சரிபார்க்கப்பட்டு ரூ.2,500/- சார் பதிவாளரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. ரூ.1,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி Store Room-ல் ஆவணங்களுக்கு இடையே இருந்த C.D Box-ல் ரூ.2,900/- (500x4=2000, 200x1=200, 100x7=700) காணப்பட்டது. மேற்படி பணம் குறித்து சார் பதிவாளரிடம் விசாரணை செய்ய ரூ.2,900/- குறித்து தனக்கு தெரியாது என்று கூறினார். எனவே மேற்படி பணம் ரூ.2,900/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இவ்வழக்கின் விசாரணைக்காக படை வீரர் கொடிநாள் நிதி ரசீது புத்தகம் 2022 ரசீது எண்.2963301 முதல் 2963325 வரை பயன்படுத்தப்பட்டது. ரசீது எண்.2963326 முதல் 2963400 வரை பயன்படுத்தாததும் மற்றும் மேற்படி அலுவலக தனிநபர் பண கையிருப்பு பதிவேடும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திருநெல்வேலி II நிர் இணை சார் பதிவாளர் திரு.M.முத்து முருகன் என்பவரிடம் இன்று பதிவு செய்த ஆவணங்கள் மற்றும் இன்றைய கணக்கு குறித்து கேட்டபோது, அவர் கணினியில் இருந்து எடுத்த கணக்கு A, B, D, Sub Division,

Section 41, CD fees ஆகிய தலைப்புகளில் ஆன்லைன் மூலமாக பணம் செலுத்தப்பட்டுள்ள Printout-களை (11 தாள்கள்) ஆஜர்படுத்தினார். மேற்படி தலைப்புகளில் பணமாக எந்த கட்டணமும் வசூல் செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார். சார் பதிவாளர் இருக்கைக்கு தெற்கு பக்கம் இருந்த் வாசல் வழியே உள்ளே சென்று பதிவு வைப்பறையில் இருந்த இரும்பு பேழையை திறந்து பார்க்க அதில் 'சி' கணக்குப்படி T.B ஸ்டாம்க்கு வசூல் செய்த தொகை ரூ.1,600/-ம் மற்றும் கையிருப்பு தொகை ரூ.1,387/-ம் இருந்தது. அது சம்பந்தப்பட்ட பதிவேட்டை சரிபார்த்து சார் பதிவாளர் திரு.M.முத்து முருகன் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கைகள் இன்று (15.03.2023) இரவு 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். க.நல்லையா, தனிவட்டாட்சியர் (நில எடுப்பு), நதிநீர் இணைப்பு திட்டம், அலகு-III, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம். ஒம்.மற்றும் சிலர்.

Sir, Received the complaint on 16.03.2023 at 10.30 hrs and registered a case in Tirunelveli V&AC, Cr.No.04/2023 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 r/w 102 Cr.PC on 16.03.2023 at 11.00 hrs Sd.E.Mcclarine Eskhol, ADSP, V&AC, Tirunelveli.

The original complaint, Proceedings of Special Tashildar (Land Acquisition), River Water Linking Project, Unit-III, Palayamkottai, Tirunelveli and original FIR were sent to the Hon'ble Special Judge for Trial of cases under the Prevention of Corruption Act, Tirunelveli and copies sent to concerned higher officials.

16/3/23
ADSP, V&AC
Tirunelveli.